# மூதூர் பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 27 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஜுலை 27 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மூதூர் பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூதூர் பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 48,588 க்கான களஞ்சியப் பொருட்கள் நேரடி சரி, பிழை பார்த்தலுக்கு உட்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கு நிதியேற்பாடு செய்யப்படவில்லை.

(இ) பல்வேறு நபர்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனங்கள், டிறக்டர், டிரெய்லர், நீர்ப்பம்பு, இரு சக்கர டிறக்டர், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 16 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்தது. கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புடைய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 2,096,456 ஆகும்.

(ஆ) கணக்காய்விற்கான தகவல்களைச் சமர்ப்பிக்காமை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்காமையால் ரூபா 45,029,428 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 9,128,131 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும்கூடிய வருவாய் ரூபா 2,887,355 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | | 2011 | | |
|---|---|---|---|---|
| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வை வரியும் | 4,434 | 509 | 3,925 |
| (ii) | குத்தகை வாடகை | 10,358 | 3,098 | 7,260 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | - | - | - |
| (iv) | பிற வருவாய் | 9 | 1 | 8 |
| | | 14,801 | 3,608 | 11,193 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலிருந்து சபை பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடப்படாதிருந்தது.

(ஆ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கெனப் பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் கணிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.